# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

# DEPOSITION OF WITNESS

O.S.No.82./2024

**CNR.No.TNCB19000**

Date,25.11.2025 PW1

| **பெயர்** | ஆனந்த் | **வயது** | 35 |
|---|---|---|---|
| த/பெ | ராமசாமி | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | காரமடை | **மாவட்டம்** | கோயமுத்தூர் |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 25th November 2025

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு சிட் பண்ட் மற்றும் காய்கறி தொழில் செய்கிறேன். சிட் பண்ட் டி டி ஆர் பெயரில் தொழில் செய்கிறேன். சிட் பண்ட்டில் ரூ. 1 லட்சத்தில் இருந்து 10 லட்சம் வரை தொழில் செய்கிறேன். அனைத்து சிட்களும் பதிவு செய்யப்பட்ட சிட்கள் ஆகும். ஒவ்வொரு சிட் குரூப்பும் பதிவு செய்யும்போது அதற்கான எண் கொடுப்பார்கள் என்றால் சரிதான். என்னிடம் மொத்தம் 15 குரூப் சிட் நடப்பில் உள்ளது. நான் 5 வருடங்களாக சிட் நடத்தி வருகிறேன். எனது அப்பா 20 வருடங்களாக சிட் நடத்தி வந்தார். எனது அப்பா நடத்தி வந்த சிட் குரூப்பை டி டி ஆர் பெயரில் நடத்தி வந்தாரா என்றால் எனது அப்பா பதிவு செய்யவில்லை. நான்தான் பதிவு செய்து டி, டிஆர் பெயரில் நடத்தி வருகிறேன்.

எனது அப்பா எத்தனை குரூப் சிட் நடத்தி வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் நடத்தி வரும் சந்தா தொகைகள் அனைத்தும் வருமானவரிக்கு உட்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதி பழனிச்சாமியை எனக்கு எந்தவகையில் பழக்கம் என்றால் காய்கறி மண்டியில் அவரும் ஒரு பங்குதாரர் . எனது காய்கறி மண்டியில் பிரதிவாதியும் ஒரு அங்கத்தினர் ஆவார். எத்தனை வருடமாக அங்கத்தினராக இருக்கிறார் என்றால் அதுபற்றி தெரியாது. ஆனால் எனக்கு முன்பிருந்தே இருக்கிறார். முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள

கையெழுத்தை எங்கு வைத்து செய்தேன் என்றால் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். பிரதிவாதிக்கு எந்த வருடத்தில் கடன் கொடுத்தேன் என்றால் 2023 ம் ஆண்டில் கொடுத்தேன்.

பிரதிவாதிக்கு கடன் கொடுத்த பணம் எனக்கு காய்கறியில் இருந்து கிடைத்த பணமா என்றால் எனது சொந்த பணம். மொத்தமாக வைத்திருந்தேன். நான் ஒவ்வொரு வருடமும் வருமான வரித்துறைக்கு கணக்கு செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். 2022-2023 ம் ஆண்டிற்கான வருமான வரி கணக்கில் இந்த தொகையை காண்பித்திருக்கிறேனா என்றால் காண்பித்துள்ளேன். 2022-2023 க்கான வருமான வரி கணக்கிற்கான அறிக்கையை தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். குறிப்பிட்டு எந்த தேதியில் பிரதிவாதி கடன் கேட்டார் என்றால் 23.04.2023 ல் கடன் கேட்டார்.

பிரதிவாதி கடன் கேட்ட அன்றே பணம் கொடுத்தேனா என்றால் அதற்கு 3 நாட்களுக்கு முன்பே கேட்டிருந்தார். மார்க்கெட்டில் வைத்து பணம் கேட்டார். குறிப்பிட்டு எந்த தேதியில் எத்தனை மணிக்கு கேட்டார் என்றால் இரவு நேரம் என்பதால் தெரியவில்லை. 3 நாட்களுக்கு பின்னர் நானே அவரை கூப்பிட்டு கொடுத்தேனா என்றால் இல்லை. எனது முதல்விசாரணை வாக்குமூலத்திலோ பிராதிலோ 3 நாட்களுக்கு முன்பே பிரதிவாதி பணம் கேட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். தற்போது கேட்டதால் சொல்கிறேன்.

( வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.11.25 19:53:47 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.